தென் துளிர்

மாதாந்த இதழ்

மாதம் : பங்குனி | இதழ் : 03



பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

இலவச கண் சத்திர சிகிச்சை முகாம்

தென்மராட்சி பிரதேச செயலகம், நல்லூர் கிங்டம் லயன்ஸ் கழகம், தென்மராட்சி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன STS வைத்திய சாலையுடன் இணைந்து நடாத்திய இலவச கண் சத்திரசிகிச்சை முகாம் 01.03.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 6.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை STS வைத்தியசாலையில் நடைபெற்றது.



கடந்த 08.02.2026 அன்று சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கண் பரிசோதனை முகாமில் அவசியம் கண்புரை சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டியவர்களாக இனங்காணப்பட்ட 35 நோயாளிகளுக்கும் மேலதிகமாக முன்பு இனங் காணப்பட்ட 7 நோயாளிகளுக்குமாக 42 பேருக்கு மேற்குறித்த சத்திரசிகிச்சையானது மேற்கொள்ளப் பட்டது. இவர்களுள் பலர் தமக்கு பார்வை குறைபாடு இருப்பதை அறிந்திருந்த போதிலும் வைத்திய சாலைக்கு சென்றிருக்கவில்லை.

நல்லூர் கிங்டம் லயன்ஸ் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக பிரதேச செயலாளரினால் கிராம அலுவலர்கள் ஊடாக பயனாளிகள் இனங்காணப் பட்டு கண்புரை சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது

மேலும் மக்களுக்கு இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையினை Dr.S.T.சந்திரகுமார் அவர்கள் தனது STS வைத்தியசாலை ஊடாக வழங்கியிருந்தார்

பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டம்



முதலாம் காலாண்டுக்குரிய பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டமானது 2026.03.04 புதன் கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் கு .ஊ சத்தியசோதி அவர்கள் தலைமையில் காலை 11.30 மணியளவில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி , பொலிஸ் பொறுப்பதிகாரி (சாவகச்சேரி), பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் , பிரதி திட்ட பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர் (தலைமைப்பீடம்), பொலிஸ் உத்தியோகத்தர்கள் (கொடிகாமம்) , மதுவரி உத்தியோகத்தர், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் , பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டதுடன் சிறுவர் பாதுகாப்பு , சிறுவர் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Peace education அறிமுக நிகழ்வு

HWPL நிறுவனத்தின் 2026 Peace Educator Training for peace settlement in Srilanka அறிமுக நிகழ்வானது 09.03.2026 திங்கட்கிழமை அன்று மு.ப 10.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டப த்தில் பிரதேச செயலாளர் F.C.சத்தியசோதி அவர் களின் தலைமையில் ஆரம்பமானது. குறித்த சான்றிதழ் பயிற்சி நெறிக்கான அறிமுக நிகழ்வில் எமது பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை பீடம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்ட துடன் HWPL நிறுவனத்தின் Northern Sri Lanka General Director Guyomar Rayen , செயலாளர் Jenith Ramdas மற்றும் HWPL Nothern Srilanka நிறுவன ஊழியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



சமுர்த்தி திணைக்களத்தின் சர்வதேச மகளிர் தினம்



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சர்வதேச மகளீர் தின விழாவானது கொடிகாமம் வங்கிக்குட்பட்ட யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மதிப்புக்குரிய பிரதேச செயலாளர் திரு F.C. சத்தியசோதி தலைமையில் ஆரம்பமாகியது . நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் மேலதிக மாவட்ட செயலாளர் மதிப்புக்குரிய க.சிவகரன் அவர்களும் விருந்தினர்களாக பாடசாலை அதிபர் திரு.க. கோடீஸ்வரன் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் திருமதி. ஆ.உமாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். அடுத்து மங்கள விளக்கேற்றலினை தொடர்ந்து இறைவணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையினை சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திருமதி .ஜெ.வசந்தி அவர்களும் தலைமையுரையினை பிரதேச செயலாளர் திரு .F. C. சத்தியசோதி அவர்களும் விருந்தினர் உரையினை முகாமையாளர் திருமதி. ஆ.உமாதேவி அவர்களும் அதிபர் திரு.க.கோடீஸ்வரன் அவர்களும் பிரதம விருந்தினர் உரையினை மேலதிக மாவட்ட செயலாளர் திரு.க.சிவகரன் அவர்களும் நிகழ்த்தினார்கள். பிரதம விருந்தினர் தனது உரையில் பெண்கள் சுய தொழில்களை மேற்கொள்வ தன் மூலம் தமது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்த முடியும் என கூறினார். அத்துடன் மகளீரிற்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்த தோடு கலந்து கொண்டிருக்கும் மாணவர்கள் கல்வியில் சிறந்தது விளங்க தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். தொடர்ந்து மகளீரிற்கான விளையாட்டு நிகழ்வுகள் மைதானத்தில் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து வெற்றியாளர்களிற்கான பரிசில் வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து கொடிகாமம் வங்கிக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் (புத்தகப்பை) வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இத்துடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தது.



'முழு நாடுமே ஒன்றாக'



"முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய செயற்பாட்டிற்கு இணைந்த வகையில் விஷ போதைப்பொருளை தடுப்பதற்கான வாரத்தினை முன்னிட்டு 02/03/2026 சாவகச்சேரி நகரில் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் முச்சக்கர வண்டிகளில் விழிப்புணர்வு Sticker பொலிசாருடன் இணைந்து ஒட்டப்பட்டது.

Work Force SriLanka



இன்று 12.03.2026 யா /கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான workforce SriLanka நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாயிகளுக்கான சமூக முன்னேற்றத்துக்கான கருத்துக்கணிப்பு

ILO நிறுவனத்தின் அனுசரனையுடன் விவசாயி களுக்கான சமூக முன்னேற்றத்திற்கான கருத்துக் கணிப்பு Facilitation support for positive Masulinity programme-ILO GROW project ஆரம்ப கலந்துரை யாடல் , 11.03.2026 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலாளர் F.C சத்தியசோதி அவர் களின் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், ILO நிறுவன உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் மாம்பழப் பயிர்செய்கை யினை முன்னெடுக்கும் 30 முயற்சியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உற்பத்தியாளர் மன்றம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் முயற்சியாளர்களை ஒன்றி ணைக்கும் "உற்பத்தியாளர் மன்றம்" (Entrepreneur's Forum) எனும் நிகழ்வானது பிரதேச செயலாளர் F. C. சத்திய சோதி தலைமையில் இன்று 31/03/2026 காலை 9.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் இராசதுரை திலீபன், கணக்காளர் R. றமணன், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இவ் நிகழ் வில் உற்பத்தியாளர் மன்றத்திற்கான புதிய நிர்வாக தெரிவு இடம் பெற்றதுடன் அங்கத்தவர் பதிவு, யாப்பு முன்மொழிவு மற்றும் உற்பத்தியாளர் பிரச்சனைகள் கலந்து ஆலோசிக்கப்பட்டன.



உற்பத்திதிறன் மேம்படுத்தல் கருத்தரங்கு

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக உத்தி யோகத்தர்களுக்கான உற்பத்தித்திறன் மேம்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு 30.03.2026 ம் திகதி மு. ப 9.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் வலயக்கல்வி பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் வளவாளராக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

திரசவிய வீட்டுத்திட்டம்

முதியோர் தேசிய செயலகத்தில் நடைமுறைப படுத்தப்படும் முதியவர்களுக்கான குறைந்தபட்ச வசதிகளை வழங்குதல் மற்றும் திரிசவிய வீட்டுத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு செய்வதற்காக அவர்களது வீடுகளுக்கு இன்றைய தினம் 26.03.2026 மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

SDJF செயலமர்வு

பாலினப் பொறுப்புணர்வுடன் கூடிய பொலிஸ் சேவைகள் மற்றும் சமூக வகைகூறல் தன்மை குறித்த சமூக ஈடுபாட்டு கருத்தரங்கு 13.03.2026 வெள்ளிக் கிழமை மு.ப 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப்பிரதேச செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ் செயல மர்வை இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவி யலாளர் (SDJF) மன்றத்தினர் மேற்கொண்டி ருந்தனர். இன்றைய செயலமர்வில் SDJF இனால் உருவாக்கப்பட்ட GESI.lk தளத்தின் பயன்பாடு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள்,மாற்று வலுவுடையோர் சங்கத்தின் பிரதிநிதிகள், சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகசேவைக்கிளை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சமூர்த்தி உற்பத்திதிறன் மாதிரி கிராமத் திட்டம்



தென்மராட்சி பிரதேச செயலக மந்துவில் கிழக்கு கிராமத்தில் சமூக உற்பத்தித்திறன் மாதிரிக் கிராமத் திட்டம் அங்குரார்ப்பணம்!

"கிளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் "சமூக உற்பத்தித்திறன் மாதிரி கிராமங்களை" அங்குரார்ப்பணம் செய்யும் வேலைத் திட்டம் இன்றைய தினம் (16.03.2026) பிற்பகல் 3 மணிக்கு மந்துவில் கிழக்கு கிராமத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, மங்கல விளக்கேற்றப்பட்டது.

தொடர்ந்து ஆசியுரையினை மந்துவில் கிழக்கு பிரதேசத்தை சார்ந்த வணக்கத்திற்குரிய திவாக குருக்கள் நிகழ்த்தினார். வரவேற்பு நடனத்தினைத் தொடர்ந்து வரவேற்புரையினை மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் திருமதி கி. சங்கீதா அவர்கள் நிகழ்த்தினார்.

சமூக உற்பத்தித்திறன் திட்டம் பற்றிய தேசத்தை கட்டியெழுப்புகின்ற வளமான கிராமம் தொனிப் பொருளிலான காணொளி, Clean Sri Lanka செயலகத்தின் விளம்பர காணொளி ஆகியன காண்பிக்கப்பட்டதுடன், தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு கு.ஊ சத்தியசோதி அவர்கள் சமூக உற்பத்தித்திறன் திட்டம் மற்றும் அதன் நோக்கங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.அவர் தனது உரையில் இவ் கிராமமானது எதிர்காலத்தில் ஒரு சிறந்த கிராமமாகவும் மாதிரி கிராமமாகவும் வளம் மிக்க கிராமமாகவும் மாற்றப்பட வேண்டும் எனவும் இங்கு வருகை தந்திருக்கும் அனைவரும் இந்த ஆறு தூண்கள் தொடர்பில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் வீட்டு முகாமை, கலாசாரம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற ஆறு விடயங்களையும் உள்வாங்கி செயற்பாடுகளை ஒன்றிணைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும், இவ் உற்பத்தி கிராமம் தேசிய உற்பத்தி திறன் செயலகத்தினுடைய செயற்பாடு அல்லது கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தினுடைய செயற்பாடுகள் மட்டுமல்லாது அனைத்து செயற்பாடுகளிலும் குழுவாக செயற்பட்டு அபிவிருத்தி நோக்கிய சிறந்த ஒரு கிராமமாக மாற்றுவதற்கான அடித்தளமாக இன்றைய நிகழ்வு காணப்படுவதாக தெரிவித்தார்.

நிகழ்வின் கருத்துரைகளை பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான கௌரவ திரு கருணைநாதன் இளங்குமரன், ஊடநயஎ ளுசஅ டுயமெய திட்டத்தின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் வைத்தியர் செல்வக் குட்டி செல்வகணேஷ் ஆகியோர் வழங்கினர். மேலும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தரால் அடையாளம் காணப்பட்ட சமூக உற்பத்தித்திறன் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டத்தின் அறிக்கை நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அதிதிகளுக்கு கையளிக்கப்பட்டன.

மந்துவில் கிழக்கு பிரதேசத்தைச் சார்ந்த கலைஞர்களாலும் சிறுவர் சிறுமிகளாலும் கலாசார நிகழ்வுகள் நடத்தப்பட்டன.



இந்நிகழ்வில் மந்துவில் கிழக்கு வட்டார பிரதேச சபை உறுப்பினர் கௌரவ திரு கு.தினேஷ்,மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் பிரத்தியேக உதவியாளர் காராளசிங்கம் பிரகாஷ் அவர்களும் மந்துவில் கிழக்கு கிராமத்தின் பிரஜா சக்தி தலைவர்,பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு ராஜதுரை திலீபன், சமூர்த்தி தலைமைப்பீட

தேசத்தை கட்டியெழுப்பும் வளமான கிராமம்



"தேசத்தை கட்டியெழுப்பும் வளமான கிராமம்" சமூக உற்பத்தித்திறன் மாதிரிக் கிராமங்களை அங்குரார்ப்பணம் செய்யும் தேசிய வேலைத்திட்டம் – 2026 இத் திட்டத்தின் கீழ் எமது தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட J/345 மந்துவில் கிழக்கு சமூக உற்பத்தித் திறன் மாதிரி கிராமத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக 12.03.2026 அன்று மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F. C சத்தியசோதி அவர்களால் பார்வையிடப்பட்டது.

பொதுசன மாதாந்த கொடுப்பனவு மீளாய்வு

நாவற்குழி கிழக்கு மற்றும் தனங்கிளப்பு கிராம அலுவலர் அலுவலகங்களில் 26.03.2026 இன்றைய தினம் கிராம உத்தியோகத்தர், மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர், ஆகியோரின் பங்குபற்றலுடன் பொதுசன மாதாந்த உதவிக்கொடுப்பனவு மற்றும் நோய்க்கொடுப்பனவு மீளாய்வு நடவடிக்கை இடம்பெற்றது.

வாராந்த சந்தை

தென்மராட்சிப் பிரதேச செயலக கைதடி சமுர்த்தி வங்கியில் 24.03.2026 செவ்வாய்க்கிழமை உள்ளூர் உற்பத்தியாளர்களிற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் வாராந்த சந்தை இடம்பெற்றது. இந் நிகழ்வில் தலைமையக முகாமையாளர், வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள், விற்பனையாளர்கள், பொதுமக்கள்



தொழில்முறை பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராம பிரிவுகளை சேர்ந்த பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளிற்கான தொழில் முறை பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு மதிப்பிற் குரிய பிரதேச செயலாளரின் பங்குபற்றுதலுடன் 24.03.2026 செவ்வாய்க்கிழமை மாலை 1.30 மணிக்கு பிரதேச செயலக பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், தொழில் கற்கை நெறிகளை வழங்குகின்ற நிறுவன பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் தொழில் கற்கை நெறிகளை வழங்குகின்ற நிறுவன பிரதிநிதிகள் தங்களது நிறுவன பயிற்சி முறைகள் மற்றும் வேலைவாய்ப்புக்கள் சம்பந்தமாக விரிவாக விளக்கமளித்தார்கள்.

காணி பயன்பாட்டு திட்டமிடல் கூட்டம்



பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக்கூட்டம் 20.03.2026 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் உதவிப்பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி இணைப்பாளர், பிரதேச சபை தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபை உதவிப்பணிப்பாளர், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத் தலைவர், விவசாயத் திணைக்கள விவசாயப் போதனாசிரியர்– கைதடி, சாவகச்சேரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், வன பரிபாலன, வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர், தனங்கிளப்பு விவசாய சம்மேளன மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், J/293,294,299 கிராம அலுவலர்கள், முதலீட்டாளர்கள் மாவட்ட, பிரதேச செயலக காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள், ஏனைய காணிக்கிளை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இதில் நீண்ட காலக் குத்தகையில் 05 காணி கோரிக்கைகள் மற்றும் காணிக் கச்சேரி அனுதிக்காக 07 காணிக் கோரிக்கைகளும் சிபார்சுக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

ஆயுள்வேத மருத்துவ முகாம்

10.03.2026 அன்று ஆயுர்வேத அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஒழுங்கமைப்பில் கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலர் தலைமையில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பங்கு பற்றுதலுடன் ஆயுர் வேத மருத்துவ முகாம் ஆனது கைதடி சித்த வைத்தியசாலை அனுசரணையுடன் இடம்பெற்றது. அத்துடன் சமூக சித்த மருத்துவர் னுச. ரஜிதா அவர்களால் "தொற்று நோய் பரவுதல் மற்றும் உணவுப் பழக்க வழக்கம்" தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது . இதில் பல பொது மக்களும் பயன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட சுயதொழில் முயற்சியானர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு



கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினால் "டித்வா" புயலினால் பாதிக்கப்பட்ட 35 சுயதொழில் முயற்சியாளர்களுக்கான இழப்பீட்டு காசோலை ரூபாய் இரண்டு லட்சம் வழங்கும் நிகழ்வு 23ஃ03ஃ2026 திங்கட்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரின் இணைப்பாளர் மற்றும் உதவி பிரதேச செயலர், கணக்காளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

டித்வா புயலினால் ஏற்பட்ட சேதங்களால் பாதிக்கப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த இழப்பீடு வழங்கப்பட்டது, இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தமது தொழில் முயற்சிகளை மீண்டும் மேற்கொள்ள வழிவகுக்கும்.



பண்பாட்டு பேரவையின் நிர்வாக தெரிவு

2026 ஆம் ஆண்டிற்கான தென்மராட்சி பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பொது கலந்துரையாடலும், புதிய நிர்வாகத் தெரிவும் 2026.03.17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் F .C .சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர் , மூத்த கலைஞர்கள், இளங்கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் ,உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்



தென்துளிர் இதழ் குழு

திரு F.C.சத்தியசோதி
(பிரதேச செயலாளர்)
திருமதி லாகினி நிருபராஜ்
(உதவி பிரதேச செயலாளர்)
திருமதி சுபா தர்சன்
(சுகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்)
திரு லோ.ஜெசிகரன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
திருமதி லாவண்யா சதாரூபன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தென்துளிர் இதழ் குழு

திரு ப.அயூரன்
(உதவி மாவட்டப் பதிவாளர்)
திருமதி சுபோஜனா மதிவதனன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
திரு கி.மகாராஜ்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
திருமதி கனகேஸ்வரி நிக்ஸன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)